# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில A+ (CGPA:3.64) தகுதிபெற்றது)

---

நாள் : 7.7.2017

காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழக கணினிமையம் சார்பில் மூத்தகுடி மக்களுக்கான "கணினி மற்றும் வலையதளத்தை எவ்வாறு பயன்படுத்துதல்" குறித்த குறுகிய கால இலவச சான்றிதழ் பயிற்சிவகுப்புகள் 27.6.2017 முதல் 1.7.2017 வரைஐந்துநாட்கள் பல்கலைக்கழக ஆங்கிலம் மற்றும் அயல்நாட்டுமொழிகள் துறைகணினி ஆய்வகத்தில் நடைபெற்றது.



இந்தபயிற்சிவகுப்பில் கணினிசார்ந்த உபகரணங்கள், மின்னஞ்சல் அனுப்புதல் ,சமூகவளைதளம் மூலமாக செய்திபகிர்தல், ஆன்லைன் பரிவர்த்தனைவாயிலாக இரயில், பேருந்து மற்றும் விமானடிக்கெட் மற்றும் மின்சாரகட்டணம் செலுத்துதல் தொடர்பானபயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதற்குமுன்னர், காரைக்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மூத்தகுடிமக்கள் மற்றும் குடும்பத் தலைவிகள் பயன்பெறும் வகையில் பல்வேறுபயனுள்ள பயிற்சிவகுப்புகள் அழகப்பாபல்கலைக்கழகத்தில் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்தபயிற்சியில் மொத்தம் 20 மூத்தகுடிமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இந்தவகுப்பில் பங்கேற்று பயிற்சியை முடித்தவர்களுக்கு 7.7.2017 அன்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் சான்றிதழ்களை நேரில் வழங்க ிபாராட்டினார். அப்போது பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் வி. பாலச்சந்திரன், கணினிமைய இயக்குநர் முனைவர் அ. செந்தில்ராஜன், கணினிமையத்தைச் சார்ந்தமுனைவர் வி. நந்தகுமார், திரு. ஆர்.ரமே' பாபுமற்றும் திரு. எஸ்.ராஜகோபால் ஆகியோர் உடனிருந்தனர்.

பேரா.வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)